குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.65/2019

அ.சா. 7

2024–ம் ஆண்டு டிசம்பர் 03–ம் தேதி செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி 07–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோவிந்தராஜ் | ஜாதி | |
| தந்தை பெயர் | ராஜு | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 03.39 மணி,

Accused A1. Patti Ramasamy A2.Kaliyamoorthi, present. Advocate Mr. Kanagaraj present for A1. Advocate Mr. A.Nagenthiran present for A2. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் தாரமங்கலம் மிளகாய்காரனூரில் குடியிருந்து கொண்டு விசை தறி தொழில் செய்து வருகிறேன். கடந்த 14.10.2018 ம் தேதி எனது பாட்டி வெள்ளையம்மாள் தாரமங்கலத்தில் உள்ள சீனிவாச மருத்துவமனைக்கு சென்று இருந்தார். அவர் மருத்துவமனைக்கு வெளியே நின்று கொண்டு இருந்த போது அவரிடமிருந்து செயினை பறித்துக் கொண்டுவிட்டதாக எனக்கு தகவல் சொன்னார். நான் அங்கு சென்று பார்த்த போது சம்பவ இடத்தில் இருந்த பொது மக்கள் என் பாட்டியிடம் இருந்து நகையை பறித்த ராமசாமி என்பவரை பிடித்து வைத்து இருந்தார்கள்.

2. நானும் என்னுடன் வந்த கார்த்தி மற்றும் அங்கிருந்த நபர்களும் சேர்ந்து ராமசாமியை காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம். ராமசாமி ஏற்கனவே திருட்டு செயலில் ஈடுபட்டதாக போலீசாரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். பின்பு காமாண்டப்பட்டி அழைத்து சென்று இருந்தனர். அங்கு ராமசாமி அவரது உறவினர்

வீட்டில் இருந்து 5 பவுண் நகையை எடுத்து போலீசாரிடம் கொடுத்தார். பின்பு ஓமலூர் பைக் ஸ்டேண்டில் இருந்து ஒரு இருசக்கர வாகனத்தை போலீசார் எடுத்தார். என்னிடம் காட்டப்படும் ராமசாமி என்பவரின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். **(அந்த ராமசாமி என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையெழுத்து அ.சா.ஆ– 5 ஆகவும், கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து அ.சா.ஆ– 6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் இது குறித்து என்னை விசாரித்தார்கள்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

**3.** நான் காவல் நிலையத்திற்கு செல்வதற்கு முன்பாகவே எதிரியிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. நான் சென்ற பின்பு தான் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார். எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்த காவல் அதிகாரிகளின் பெயர் மற்றும் பதவி எனக்கு தெரியாது என்றால் காவல் ஆய்வாளர் தான் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார்.

4. எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலம் கையால் எழுதப்பட்டு இருந்ததா அல்லது தட்டச்சு செய்யப்பட்டு இருந்ததா என்று எனக்கு தெரியாது என்றால் சரி. எதிரிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் இருசக்கர வாகனத்தின் பதிவெண் மற்றும் நிறம் எனக்கு தெரியாது என்றால் சரி. எதிரிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட நகையின் வடிவம் எனக்கு தெரியாது என்றால் முறுக்கு செயினை கைப்பற்றினார்கள்.

5. இவ்வழக்கு எதிரிகளை கைது செய்து போது அவர்களிடம் இருந்து தாரமங்கலம் காவல் நிலைய குற்ற எண் 598/2018 என்ற வழக்கு தொடர்பான வழக்கு சொத்தை கைப்பற்றியதற்கு நான் சாட்சி கையெத்து செய்துளளேன் என்றால் மேற்படி காவல் நிலையம் மற்றும் குற்ற எண் தெரியாது. ஆனால் இவ்வழக்கு எதிரிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட வேறு வழக்கு சொத்துக்களுக்கு நான் கைப்பற்றும் மகஜரில் கையெழுத்து செய்துள்ளேன். நான் வேறு எந்த வழக்குகளில் சாட்சியாக இருந்து சாட்சி கையொப்பம் இட்டேன் என்று எனக்கு தெரியாது என்றால் சரி.

6. ஒப்புதல் வாக்குமூலம் எவ்வளவு நேரம் பதிவு செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. எதிரிகளிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்த போது அங்கு

வேறு யார் இருந்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை. வெள்ளையம்மாள் அவரிடம் இருந்து நகை பறிக்கப்பட்டது தொடர்பாக எனக்கு போன் மூலம் தகவல் கொடுத்தார். மேற்படி விபரத்தை போலீசாரிடம் நான் சொல்லவில்லை. நான் கையெழுத்து செய்த எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலம் எத்தனை பக்ககங்கள் இருந்தது என்றால் தெரியவில்லை.

7. எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் பற்றி எனக்கு தெரியாது. கைப்பற்றுதல் மகஜரில் உள்ள சங்கதிகள் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரி. போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு தொடர்பாக எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

8. (1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை ஏற்கப்படுகிறது). வெள்ளையம்மாள் நகைப் பறிபோனது சம்பந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி. எதிரிகள் பிடித்ததாக நான் கூறியுள்ள நிலையில் அவர்களை பொதுமக்கள் அடித்தார்களா என்றால் எனக்கு தெரியாது. சம்பவ இடம் காமாண்டப்பட்டி குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் எந்த இடத்தில் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும் சரி. எதிரி ராமசாமியின் உறவினர் வீடு ஓட்டு வீடு என்று போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வெள்ளையம்மாள் என்பவரின் நகையை பெற்றுத்தர வேண்டும் என்பதற்காக எதிரிகளுக்கு எதிராக போலீசார் வேண்டுகோளுக்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 04.04 மணி,

ஒம்/–ச.ஷர்மிளா,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.